செ.வெ.எண்:41 நாள்:26.03.2021

# தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021
# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 2,298 வாக்குச்சாவடி மையங்களுக்கு கொரோனா நோய்தொற்று பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க நடவடிக்கை.
# மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்.

---

கிருஷ்ணகிரி மாவட்டம், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வளாகத்தில் இன்று (26.03.2021) சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 முன்னிட்டு 6 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 2,298 வாக்குச்சாவடி மையங்களுக்கு கொரோனா நோய்தொற்று பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வருகின்ற 06.04.2021 அன்று சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 2,298 வாக்குச்சாவடி மையங்களில் 15,98,865 வாக்காளர்கள், வாக்குச்சாவடி தலைமை நிலைய அலுவலர், வாக்குச்சாவடி அலுவலர்கள் (நிலை-1, நிலை-2 மற்றும் நிலை-3), முகவர்கள் ஆகியோர் பாதுகாப்புடன் வாக்களிப்பதையும், பணியாற்றுவதையும் உறுதி செய்யும் வகையில் தெர்மா ஸ்கேனர், முககவசங்கள், கிருமி நாசினி, கையுறை, பாதுகாப்பு கவச உடை உட்பட பல்வேறு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, 51.ஊத்தங்கரை (தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 345 வாக்குச்சாவடி மையங்களில் வாக்களிக்கும் 2,37,070 வாக்காளர்களர்கள், அலுவலர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோர்களுக்கு 345 தெர்மா ஸ்கேனர், 2,070 (500மிலி) மற்றும் 3,450 (100 மிலி) கிருமிநாசினி, 3,450 முககவசங்கள், 20,700 மூன்றடுக்கு முககவசங்கள், 8,625 ஓரடுக்கு முககவசங்கள், 10,350 கையுறைகள், 1,725 எல்.டி.பி.இ பேக்கேஜ், 345 டி கட் பேக், 2,37,070 பாலிதீன் கையுறைகள், 4,140 பிபிஇ உபகரணங்களும், 52.பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 352 வாக்குச்சாவடி மையங்களில் வாக்களிக்கும் 2,46,249 வாக்காளர்கள், அலுவலர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோர்களுக்கு 352 தெர்மா ஸ்கேனர், 2,112 (500மிலி) மற்றும் 3,520 (100 மிலி) கிருமிநாசினிகள், 3,520 முககவசங்கள், 21,120 மூன்றடுக்கு முககவசங்கள், 8,800 ஓரடுக்கு முககவசங்கள், 10,560 கையுறைகள், 1,760 எல்.டி.பி.இ பேக், 352 டி கட் பேக்கேஜ், 2,46,249 பாலிதீன் கையுறைகள், 4,224 பிபிஇ உபகரணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்து, 53.கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 377 வாக்குச்சாவடி மையங்களில் வாக்களிக்கும் 2,65,238 வாக்காளர்களர்கள், அலுவலர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோர்களுக்கு 377 தெர்மா ஸ்கேனர், 2,262 (500மிலி) மற்றும் 3,770 (100 மிலி) கிருமிநாசினிகள், 3,770 முககவசங்கள், 22,620 மூன்றடுக்கு முககவசங்கள், 9,425 ஓரடுக்கு முககவசங்கள், 11,310 கையுறைகள், 1,885 எல்.டி.பி.இ பேக், 377 டி கட் பேக்கேஜ், 2,65,238 பாலிதீன் கையுறைகள், 4,524 பிபிஇ உபகரணங்களும், 54.வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 373 வாக்குச்சாவடி மையங்களில்

வாக்களிக்கும் 2,50,505 வாக்காளர்களர்கள், அலுவலர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோர்களுக்கு 373 தெர்மா ஸ்கேனர், 2,238 (500மிலி) மற்றும் 3,730 (100 மிலி) கிருமிநாசினிகள், 3,730 முககவசங்கள், 22,380 மூன்றடுக்கு முககவசங்கள், 9,325 ஓரடுக்கு முககவசங்கள், 11,190 கையுறைகள், 1,865 எல்.டி.பி.இ பேக்கேஜ், 373 டி கட் பேக், 2,50,505 பாலிதீன் கையுறைகள், 4,476 பிபிஇ உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது.

மேலும், 55.ஒசூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 503 வாக்குச்சாவடி மையங்களில் வாக்களிக்கும் 3,49,224 வாக்காளர்களர்கள், அலுவலர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோர்களுக்கு 503 தெர்மா ஸ்கேனர், 3,018 (500மிலி) மற்றும் 5,030 (100 மிலி) கிருமிநாசினிகள், 5,030 முககவசங்கள், 30,180 மூன்றடுக்கு முககவசங்கள், 12,575 ஓரடுக்கு முககவசங்கள், 15,090 கையுறைகள், 2,515 எல்.டி.பி.இ பேக்கேஜ், 503 டி கட் பேக், 3,49,224 பாலிதீன் கையுறைகள், 6,036 பிபிஇ உபகரணங்களும், 56.தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 348 வாக்குச்சாவடி மையங்களில் வாக்களிக்கும் 2,50,579 வாக்காளர்களர்கள், அலுவலர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோர்களுக்கு 348 தெர்மா ஸ்கேனர், 2,088 (500மிலி) மற்றும் 3,480 (100 மிலி) கிருமிநாசினிகள், 3,480 முககவசங்கள், 20,880 மூன்றடுக்கு முககவசங்கள், 8,700 ஓரடுக்கு முககவசங்கள், 10,440 கையுறைகள், 1,740 எல்.டி.பி.இ பேக்கேஜ், 348 டி கட் பேக், 2,50,579 பாலிதீன் கையுறைகள், 4,176 பிபிஇ உபகரணங்கள் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 2,298 வாக்குச்சாவடி மையங்களுக்கு மொத்தம் 2,298 தெர்மா ஸ்கேனர், 13,788 (500மிலி) மற்றும் 22,980 (100மிலி) கிருமிநாசினிகள், 22,980 முககவசங்கள், 1,37,880 மூன்றடுக்கு முககவசங்கள், 57,450 ஓரடுக்கு முககவசங்கள், 68,940 கையுறைகள், 11,490 எல்.டி.பி.இ பேக்கேஜ், 2,298 டி கட் பேக், 15,98,865 பாலிதீன் கையுறைகள், 27,576 பிபிஇ உபகரணங்கள் தனித்தனியே தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள், அலுவலர்கள், பணியாளர்கள், முகவர்கள் என அனைவரும் வரும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021-ல் பாதுகாப்பான முறையில் சிறப்பாக நடத்திட ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**